### நம் முதலமைச்சரின் திட்டங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றன! பயனாளிகள் அனைவரும்

# அரசின் திட்டங்களை மக்களிடம் சேர்த்திட தூதுவர்களாக செயல்படுவீர்!

## திருப்பத்தூரில் 14,500 பேருக்கு நல உதவிகள் வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**திருப்பத்தூர், ஜூலை 19 - "நம் முதலமைச்சரின் திட்டங்கள் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றன. பயனாளிகள் அனைவரும் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்திட அரசின் தூதுவர்களாக செயல்பட வேண்டும்" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருப்பத்தூர் மாவட்டத்தில் 14,500 பயனாளிகளுக்கு அரசின் நல உதவிகளை வழங்கிப் பேசும்போது கூறினார்.**

விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

பேரன்பு மிக்க பெரியோர்களே, தாய்மார்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே! உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னுடைய உரையைத் துவங்குவதற்கு முன்பு உங்கள் அத்தனை பேரிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். வெகுநேரம் உங்களைக் காக்க வைத்ததற்காக... நாங்கள் வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை. மணி இரண்டைத் தாண்டி போய்க்கொண்டிருக்கிறது. உங்கள் முகத்தில் எப்படி மகிழ்ச்சி தெரிகிறதோ, அதே போல் பசியும் தெரிகிறது. எனக்கும் பசி இருக்கிறது.

காலை 9 மணி அளவில், வேலூரிலிருந்து வேலூர் மாநகரத்திலிருந்து புறப்பட்டு சாலை வழியாக, இங்கே இருந்து ஜோலார்பேட்டை வருவதற்குள் வரும் வழியெல்லாம் மக்களுடைய வரவேற்பை ஏற்று, கழகத்தினுடைய வரவேற்பை ஏற்று இங்கு வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகி விட்டது. அதனால், உங்களிடத்திலே நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

**அண்ணன் எ.வ.வேலு எந்தப் பொறுப்பையும் சிறப்பாக செய்யக் கூடியவர்!**

இந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும் அதை மிகமிக சிறப்பாகச் செய்யக்கூடியவர். அதற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத்தான் இந்த 'கலைஞர் நூற்றாண்டு அரசு நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சி' இப்படி ஒரு மிகப்பெரிய மாநாடு போல சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு இன்னொரு சிறிய எடுத்துக்காட்டு என்னவென்றால், கழக ஆட்சி அமைந்தவுடன் கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலைஞருடைய பெயரிலே சென்னையிலே, 'கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை' அமைக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார். அதேபோல், மதுரையிலே கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ஒரு நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அறிவித்த பதினைந்தே மாதங்களில் மிக மிகச் சிறப்பான உலகமே பாராட்டக்கூடிய வகையில் சென்னையில் 'கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை' அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், மதுரையிலே இரண்டு நாட்களுக்கு முன்பு 'கலைஞர் நூற்றாண்டு நூலகமும்' திறக்கப்பட்டு இருக்கிறது என்றால், அதற்கு முழுக்காரணம் நம்முடைய மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள்தான். அவர் வகித்திருக்கக்கூடிய பொதுப்பணித்துறைதான். அதற்கு இந்த நேரத்திலே பொதுப்பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த உங்களுக்கு மீண்டும் எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**14 ஆயிரத்து 500 பேருக்கு நல உதவிகள்!**

இந்த திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பல முறை நான் வந்திருக்கின்றேன். இளைஞர் அணிச் செயலாளராக வந்திருக்கின்றேன். கழக உறுப்பினராக வந்திருக்கின்றேன், சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கின்றேன். ஆனால், அமைச்சர் பொறுப்பேற்று, நான் பங்கேற்கின்ற முதல் நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சி அதற்காகவும் என்னுடைய வணக்கங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். நம்முடைய கழக அரசு பொறுப்பேற்று இரு பத்தி ஆறு மாதங்கள் ஆகின்றன. இந்த இருபத்தி ஆறு மாதங்களில் 260க்கும் அதிகமான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். அந்த வகையில்தான் இன்றைக்கு இங்கு கிட்டத்தட்ட 14 ஆயிரத்து 500 பயனாளிகளுக்கு 17 அரசுத் துறையின் கீழ் ரூபாய் 74 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இங்கே வழங்கி உள்ளோம்.

'எல்லோருக்கும் எல்லாம்' என்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய லட்சியம். அதற்கு எடுத்துக்காட்டாக, அதை உறுதிப்படுத்துகின்ற விதமாக இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளீர்கள். விவசாயிகள், மாணவர்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட, பழங்குடியினர், சிறுபான்மையின மக்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்த நலத்திட்ட உதவிகள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்து இருக்கிறீர்கள்.

இங்கு இருக்கும் பயனாளிகளைப் பார்த்தே, இந்த அரசு யாருக்கான அரசு என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள முடியும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசினுடைய திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில்தான், பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகின்றார்கள். ஆட்சிக்கு வந்த முதல் நாளே முதலமைச்சர் இட்ட முதல் கையொப்பமே 'மகளிருக்குக்கான கட்டணமில்லா பேருந்து' என்ற அந்த கோப்பில்தான்.

இன்றைக்கு அந்தத் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் மகளிர் 310 கோடி பயணங்களை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். குறிப்பாக, இந்தத் திருப்பத்தூர் மாவட்டம், இந்த மாவட்டத்தில் மட்டும் மகளிருக்கான இந்தக் கட்டணமில்லா பேருந்துத் திட்டத்தின் கீழ், கிட்டத்தட்ட இரண்டு கோடியே 65 லட்சம் மகளிர் பயணங்களை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 26,550 திருநங்கை கள் 11,850 மாற்றுத்திறனாளிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர். புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 2 இலட்சம் மாணவிகள் உயர்கல்விக்காக மாதம் 1,000 ரூபாய் பெற்று வருகிறார்கள்.



அதேபோல், திருப்பத்தூர் மாவட்டத்தில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் கல்வி கற்று உயர்கல்வியில் சேர்ந்து 42 கல்லூரிகளில் சேர்ந்து படித்து வரும் மாணவர்கள் 1,800 மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு மாதம் தலா 1,000 ரூபாய் வீதம் 17 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மாணவிகளுடைய வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் காலை சிற்றுண்டித் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 18 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

**மருத்துவச் செலவு பாதியாகக் குறைவு!**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மாநிலம் முழுவதும் ஏழை, எளிய விளிம்பு நிலை மக்களுடைய மருத்துவச் செலவைப் பாதியாகக் குறைத்துள்ளது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தால், திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 175 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டத்தின் கீழ் 4 அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் இன்று வரை விபத்தில் பாதிக்கப்பட்ட, கிட்டத்தட்ட 1,100 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

அதேபோல், இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலம் இந்த மாவட்டத்தில் மட்டும் 63 ஆயிரத்து நானூறு மாணவ மாணவிகள் பயனடைந்துள்ளனர். கூட்டுறவு வங்கிகளில் ஐந்து பவுன் நகைக் கடன் தள்ளுபடித் திட்டத்தால் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பயனாளிகளுக்கு, 68 கோடியே 55 லட்சம் அளவில் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2,508 விவசாயிகளுக்கு 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கலைஞருடைய வரும்முன் காப்போம் திட்டத்தின்கீழ், 36 முகாம்கள் நடத்தப்பட்டு, 16 நோய்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, 34 ஆயிரத்து 684 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள்!**

2021-2022 நிதி ஆண்டில், திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உள் விளையாட்டு அரங்கம் ரூபாய் 4 கோடியே 93 லட்சம் மதிப்பிலும் கட்டப்பட்டுள்ளது. திருப்பத் தூர் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகள் மற்றும் இதர வசதிகளுக்கான கூடுதல் கட்டடம் கட்டும் பணி ரூபாய் 56 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு ஆய்வகம், மருந்தகம் ஸ்கேன், மற்றும் எக்ஸ்ரே எடுக்கும் பணிக்காக 24 கோடியே 31 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தீவிர சிகிச்சைப் பிரிவு ஆய்வகம், ஸ்கேன், மருந்தகம் மற்றும் எக்ஸ்ரே எடுக்கும் இடம் பணிகளுக்காக ரூபாய் 23 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

**நரிக்குறவர்களுக்கு பழங்குடியினர் சான்றிதழ்!**

நரிக்குறவ இனத்தவர் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, திருப்பத்தூர் கோட்டத்தில் மட்டும் 78, வாணியம்பாடி கோட்டத்தில் 71 நரிக்குறவர் இனத்தவருக்கான பழங்குடியினர் சான்று மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக இந்த திருப்பத்தூர் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் 19 கோடியே 67 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூபாய் 3 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் 46 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 10 கோடியே 87 இலட்சம் மதிப்பீட்டில் 46 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல், பழங்குடியினர் நலத்திட்ட திட்டத்தின் கீழ் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக தேர்தல் அறிக்கையிலே, நம்முடைய தலைவர் அவர்கள் கொடுத்த ஒரு முக்கியமான வாக்குறுதி, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் வருகின்ற செப்டம்பர் 15ஆம் தேதி, கலைஞர் உடைய நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் பெயரிலேயே கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாள் செப்டம்பர் 15ஆம் தேதி, அந்தத் திட்டம், மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம் விரைவில் செயல்பட இருக்கின்றது. செப்டம்பர் 15ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் துவங்க இருக்கின்றார்கள்.

**பிற மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது!**

இப்படி ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் உங்களுக்காகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து நம்முடைய முதலமைச்சர் வகுக்கின்ற இந்தத் திட்டங்கள்தான் இந்திய ஒன்றியத்தையே வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திய இந்தத் திட்டங்கள் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள்தான் மக்களிடத்தில் எடுத்துச்சென்று சேர்க்க வேண்டும். இந்தத் திட்டங்களுடைய பயனாளிகள் என்பதோடு நீங்கள் நின்று விடக்கூடாது. இந்தத் திட்டங்களில் நீங்களும் பங்கேற்பாளர்கள். எனவே, நீங்கள் ஒவ்வொருவரும், இந்தத் திட்டங்களுடைய இந்த அரசினுடைய அம்பாசிடர்களாக (தூதுவர்களாக) செயல்படவேண்டும்.

**சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை!**

இங்கே இந்த இடத்திலே பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தார்கள், அதில் ஒரு முக்கியமான கோரிக்கை இந்த மாவட்டத்திற்கு சிப்காட் தொழிற்பேட்டை வசதி செய்துத்தர வேண்டுமென்று. கண்டிப்பாக உங்கள் கோரிக்கையை முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சென்று விரைவில், அது செயல்படுவதற்கான வழிவகைகளில் நாங்கள் ஈடுபடுவோம்.

அதேபோல், இங்கு விளையாட்டு அரங்கம் வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருந்தார்கள், ஏற்கனவே, தேர்தல் அறிக்கையிலே சொன்னபடி ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும் ஒரு மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்று வாக்குறுதியின்படி கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே முதல் பத்து தொகுதிகளை நாங்கள் அறிவித்திருந்தோம்.


அதிலே, திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் வரவில்லை இருந்தாலும், அவர் நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவரல்ல. இருந்தாலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்து இயக்கத்தினருக்கும் இந்த மினி ஸ்டேடியம் வசதி செய்துதர வேண்டும் என்ற அடிப்படையில் வாணியம்பாடி தொகுதியிலே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி ஸ்டேடியம் கட்டும் பணி துவங்க இருக்கின்றது.

அதேபோல, ஏற்கனவே பட்ஜெட்டில் அறிவித்திருக்கின்றோம். 15 கோடி ரூபாய் செலவில் டிஸ்ட்ரிக்ட் காம்ப்ளக்ஸ் கட்டுகின்ற பணியும் இங்கு துவங்கி இருக்கிறது. நிலம் தேர்ந்தெடுக்கின்ற பணியை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில், அந்த பணியும் முடிக்கப்பட்டு மாவட்டத்திற்கு 15 கோடி ரூபாய் செலவில் டிஸ்ட்ரிக்ட் காம்ப் எக்ஸ் வசதியும் செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொண்டு நாம் அனைவரும் முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நலத்திட்டங்களைப் பெற்ற உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் கூறிக்கொண்டு வாய்ப்பளித்த அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### 'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!





தமிழ்நாடு அரசு

**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஒ.அ. எண். 1/2023–24/ தவஅ / நாள். 12.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023–24 –ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-001 முதல் VPM-007) ஏழு பணிகளுக்கும் மற்றும் பெரம்பலூர் (நெ) க(ம)ப, கோட்டத்தில் (VPM-008 முதல் VPM-016) ஒன்பது பணிகளுக்கும் **இணையவழியில்** இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **10.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செமதொஇ/3687/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒ.அ. எண். 3/2023-24/ தவஅ / நாள் : 14.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24 -ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-019) ஒரு பணிக்கு இரு உறை முறையிலும் மற்றும் பெரம்பலூர் (நெ) க(ம)ப, கோட்டத்தில் (VPM-020) ஒரு பணிக்கு ஒரு உறை முறையிலும் **இணையவழியில்** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **10.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3690 /ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

**ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு**

ஒ.அ.எண். 07/2023–24/ தவஅ/ நாள்:13.07.2023.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 வேலூர் மற்றும் இராணிப்பேட்டை** (நெ), க(ம)ப, கோட்டங்களைச் சார்ந்த 3 பணிகளுக்கு **இருஉறை முறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 10.08.2023** அன்று **12.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **22.07.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செமதொஇ/3686/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப்பொறியாளர்(நெ),**
**க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒ.அ. எண். 4/2023-24/ தவஅ / நாள் : 15.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24-ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-021) ஒரு பணிக்கு இரு உறை முறையிலும் மற்றும் பெரம்பலூர் (நெ) க(ம)ப, கோட்டத்தில் (VPM-022) ஒரு பணிக்கு ஒரு உறை முறையிலும் **இணையவழியில்** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **10.08.2023, 15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3689 /ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"